புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 - வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

===========================================================================

# இந்தியா இதழில் புலனாகும் புலப்பாட்டு நெறி

கு. விவேக்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - *641046*

===========================================================================

ஆய்வுச்சுருக்கம்

*மகாகவி பாரதியார் நினைவு நூற்றாண்டைக் கடந்து நினைவில் வாழும் தன்னிகரில்லா படைப்பாளன். இந்திய மண்ணின் விடுதலைப் போராட்டக் காலத்தில் தன் ரௌத்திர மொழிகளால் எதிர்ப்பைக் கூவிய குயில். பன்முகம் கொண்ட பாரதியின் படைப்பாளுமைகளுள் இதழியல் குறிப்பிடத்தக்கத் துறையாகும். எளிமையும், புதுமையும், இனிமையும் கொண்டு இதழாளர் பாரதி என்னும் தனித்த அடையாளத்தைத் தனக்கென உருவாக்கிக் கொண்ட உலக மகாகவி பாரதி. இந்தியா, விஜயா, கர்மயோகி, சுதேசமித்திரன், சக்ரவர்த்தினி, ஞானபாநு, பாலபாரதா, தர்மம், சூரியோதயம், விவேகபானு, சர்வஜனமித்திரன், தி இந்து, காமன்வீல் உள்ளிட்டப் பத்திரிகைகளில் தம் பங்களிப்பை ஆற்றிய பாரதி இதழியல் துறையின் புதுமையான முயற்சிகளுக்கு முன்னோடியாகக் கருதப்படுகிறார். குறிப்பாக விடுதலைப் போராட்டக் காலத்தில் பாரதியின் புரட்சி எழுத்துக்களையும், கனல்மிகு கருத்துக்களையும் இந்தியா இதழ் வெளியிட்டது. இதனால், அந்நிய அரசின் எதிர்ப்பு, பத்திரிகைத் தடைச் சட்டம், புதுவை வாழ்வு எனப் பல விளைவுகளைப் பாரதி எதிர்கொண்டார். இந்தியா இதழில் பாரதி புலப்பாட்டு நெறிகளை ஆய்ந்தறிவதன் வழி பாரதியின் இதழியல் உத்திகளை இனங்காண முடியும். பாரதி கையாண்ட புலப்பாட்டு நெறிகளுள் சொல்லாளுமை குறித்து அறிவது இன்றியமையாதது. பாரதியின் இதழியல் நடையை வெளிப்படுத்துவதாகச் சொல்லாளுமை எனும் புலப்பாட்டு நெறி அமைகின்றது. அதனைப், பகுத்தறிந்திடுமாறு இந்தியா இதழில் புலனாகும் புலப்பாட்டு நெறி எனும் இவ்வாய்வு அமைகின்றது.*

## முன்னுரை

*மகாகவி பாரதியார் பன்முகத் திறனாளர். கவிதை, கட்டுரை, காவியம், கதைகள், வசனகவிதை, மொழிபெயர்ப்பு எனப் பன்முக இலக்கியங்களைப் படைத்த இலக்கிய ஆளுமை மரபார்ந்த இலக்கிய நடைக்குப் புத்தொளி பாய்ச்சிய சொல்லேர் உழவர். அத்தகு பாரதியின் இதழியல் பணி அளப்பரியது. அவற்றுள் இந்தியா இதழில் புலனாகும் புலப்பாட்டு நெறி குறித்து ஆய்ந்தறியுமாறு இக்கட்டுரையின் நோக்கம் அமைகின்றது.*

## ஆய்வு நெறிமுறை

*மகாகவி பாரதியார் பணியாற்றிய இந்தியா இதழில் பாரதியின் சொல்லாளுமை இடம்பெறும் இடங்களை வகைப்படுத்துமிடத்து பகுப்பாய்வு அணுகுமுறையும், சொல்லாளுமையின் வாயிலாக பாரதியின் இதழியல் நடையை விவரிக்குமிடத்து விளக்கவியல் அணுகுமுறையும் கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்வில் படைப்புகளின் வழி படைப்பாளரின் புலப்பாட்டு நெறியை ஆய்ந்தறிதல் எனும் நெறிமுறை கையாளப்பட்டுள்ளது.*

ஆய்வுக் கருதுகோள்

பாரதி கையாண்ட சொல்லாளுமை எனும் புலப்பாட்டு நெறி இந்தியா இதழில் விரவிக் காணப்படுகின்றது என்பது இவ்வாய்வின் கருதுகோளாக அமைகின்றது.

ஆய்வு எல்லை

பாரதியாரின் இந்தியா பத்திரிகைக் கட்டுரைகளை இளசை மணியன் பாரதி தரிசனம் (பா.த) எனும் இரண்டு தொகுதிகளாகத் தொகுத்தளித்துள்ளார். இத்தொகுதிகளை ஆய்வெல்லையாகக் கொண்டு இந்தியா இதழில் புலனாகும் புலப்பாட்டு நெறி குறித்தத் தரவுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியா இதழும் பாரதியும்

இந்தியா 1906 ஆம் ஆண்டு மே 9 ஆம் நாள் தொடங்கப்பட்ட இதழாகும். இதன் ஆசிரியராக எம். சீனிவாச அய்யங்கார் பதிவு செய்திருந்தபோதும், மகாகவி பாரதியே இதன் பொறுப்பாசிரியராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 1908 செப்டம்பர் 5 வரை சென்னையில் வெளிவந்த இவ்விதழ் அந்நிய அரசாட்சியின் அடக்குமுறை காரணமாகப் புதுச்சேரிக்கு மாற்றப்பட்டது. இந்தியா இதழின் நிறைவுப் பதிப்பு 1910 மார்ச் 12 ஆம் நாள் வரை வெளிவந்தது.

29.02.1908 முதல் 27.06.1908 வரை இந்தியா இதழில் வெளிவந்த மகாபாரதக் கதைகள், எத்தனையோ கொள்ளைகளில் இதுவும் ஒரு கொள்ளை, ஏன் காலத்தை வீணாக்க வேண்டும் போன்ற கட்டுரைகளுக்காக இந்தியா இதழின் மீது வழக்கு தொடுக்கப்பட்டு அதன் ஆசிரியர் எனப் பதிவு செய்யப்பட்டிருந்த சீனிவாசன் கைது செய்யப்பட்டார். அவ்வழக்கில், பாரதிதான் இதழின் உண்மையான பொறுப்பாசிரியர் என சீனிவாசன் கொடுத்த வாக்குமூலம் குறிப்பிடத்தக்கது.

"இந்தியா என்னும் இந்தப் பத்திரிகை 16 பக்கங்கள் உடையது. இதற்கு மாதம் 1க்கு ரூ.350 செலவாகும்... இந்தப் பத்திரிகைக்கு எப்பொழுதும் ஸி.சுப்ரமணிய பாரதிதான் பத்திராசிரியராக இருந்தார். ஸி.சுப்ரமணிய பாரதி பத்திராசிரியராக ரூபாய் 50 மாதம் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தார்"[1] என்ற வழக்கின் கோப்புகளினின்று இந்தியா இதழில் பாரதியின் ஆற்றல்மிகு எழுத்தாளுமையைக் கண்டு ஆங்கிலேயர்கள் கலங்கியது மறைமுகமாகப் புலனாகின்றது. இப்பத்திரிகையின் மீதிருந்த தடை காரணமாகப் பாரதியார் புதுச்சேரியில் பல ஆண்டுகள் வாழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பாரதியின் தேசிய உணர்ச்சியும், அரசியல் சிந்தனைகளும், விடுதலை வேட்கையும், சமகாலச் சமூகநிலை குறித்த அவதானிப்புகளும் இந்தியா இதழில் அழுத்தமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது நோக்கத்தக்கது.

புலப்பாட்டு நெறி - விளக்கம்

புலப்பாட்டு நெறி ஆங்கிலத்தில் *Rhetoric* எனச் சுட்டப்படுகின்றது. மொழியைத் திறம்படக் கையாளும் திறன் புலப்பாட்டு நெறி எனப்படுகின்றது. செம்மையான மொழியாளுமையை உய்த்துணர புலப்பாட்டு நெறி துணைநிற்கின்றது. பல்வகைப்பட்ட புலப்பாட்டு நெறிகளுள் சொல்லாளுமை திறன் குறித்து மட்டும் இக்கட்டுரையில் ஆய்ந்தறியலாகின்றது.

- ஆங்கிலச் சொல்லாளுமை
- வடமொழிச் சொல்லாளுமை
- பிறமொழிச் சொல்லாளுமை
- வழக்குச் சொல்லாளுமை
- கலைச் சொல்லாளுமை
- புதுச்சொல்லாளுமை

ஆகிய சொல்லாளுமைகள் குறித்து ஆய்ந்தறிவதன் வழி மகாகவி பாரதியாரின் சொல்லாட்சித் திறனை இனங்காண இயலும்.

*1. ஆங்கிலச் சொல்லாளுமை*

*பாரதி வாழ்ந்த காலத்தில் ஆங்கில மொழி பேசும் அந்நியர்களின் ஆட்சியும் அடக்கு முறையும் ஓங்கிக் காணப்பட்டது. பாரதி ஆங்கிலப் பிரதிகளை வாசித்து எழுதி மொழிபெயர்க்கும் திறன் பெற்றிருந்தார். ஆனால், ஆங்கிலச் சொற்களைக் குறைவாகவே கையாண்டுள்ளார். மிகுதேவையைக் கருத்திற்கொண்டு கவர்ன்மெண்ட், ஆபிஸ் போன்ற சில சொற்களைத் தம் கட்டுரைகளில் அவ்வப்போது பயன்படுத்தியுள்ளார்.*

- *பார்லிமெண்ட் மெம்பர், 30.06.1906, ப. 300 - (பா.த)*
- *பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட், 07.07.1906, ப. 376 - (பா.த)*
- *கம்பெனியார் , 30.06.1906, ப. 373 - (பா.த)*
- *கவுன்ஸிலர், 14.07.1906, ப. 385 - (பா.த)*
- *முனிஸிபாலிடி, 01.09.1906, ப. 395 - (பா.த)*

*2. வடமொழிச் சொல்லாளுமை*

*தமிழ் மொழியினூடாக வடமொழியைக் கலந்து பயன்படுத்தும் பாங்கு பாரதியிடம் விரவிக் காணப்பட்டது. யாத்திரை, கலாசாலை, ஆச்சாரம், சுயாட்சி, ஸ்வராஜ்யம், பகிஷ்காரம் என வடமொழியின் வீச்சு அதிகமாகப் பாரதியின் இதழியல் எழுத்தாளுமையில் வெளிப்படுகின்றது.*

*சான்று*

- *தர்ம பரிபாலனம், 07.07.1906, ப. 68 - (பா.த)*
- *உதாஷீனம், 07.07.1906, ப. 70 - (பா.த)*
- *ராஜ துரோகம், 20.10.1906, ப. 182 - (பா.த)*
- *ஹிந்து ஸ்வராஜ்ஜியம், 20.10.1906, ப. 182 - (பா.த)*
- *சுதேசியம், 29.09.1906, ப. 179 - (பா.த)*

*3. பிறமொழிச் சொல்லாளுமை*

*பாரதி வாழ்ந்த காலத்தில் பிரிட்டிஷ், பிரெஞ்சு போன்ற அந்நிய ஆளுகையுடன் பிற மொழி மற்றும் இனத்தவரின் கலப்பும் ஏற்பட்டிருந்தது. இதனால் தமிழ்நாட்டில் ஏற்பட்டப் பண்பாட்டுக் கலப்பு பாரதியின் இதழியல் நடையில் பிறமொழிச் சொல்லாளுமைக்கு வித்திட்டது.*

*சான்று*

- *ஸர்க்கார், 07.07.1906, ப. 69 - (பா.த)*
- *சந்தா, 07.07.1906, ப.69 - (பா.த)*
- *ரஜா 21.07.1906, ப.209 - (பா.த)*
- *ஜாப்தா, 30.09.1906, ப. 333 - (பா.த)*
- *தபால், 30.09.1906, ப. 334 - (பா.த)*

*4. வழக்குச் சொல்லாளுமை*

*பாரதிக்கு தேர்ந்த சொல்லறிவும் செறிந்த மொழியறிவும் காணப்பட்டது. ஆனால், அரசியல் நெருக்கடி, அச்சு நுட்பங்களின் புதுமை, படி, எழுத்து, மெய்ப்பு நபர்களின் மொழியறிவு ஆகியவை சார்ந்து சில வழக்குச் சொல்லாளுமை மற்றும் மரபில்லா சொல்லாளுமை பாரதியின் எழுத்துக்களில் காணப்படுகின்றது.*

*சான்று*

- *தளும்பு (தழும்பு) - 22.12.1906, ப. 21 - (பா.த)*
- *நீச்சன் (நீசன்) - 07.07.1906, ப. 74 - (பா.த)*
- *கடுதாசி (கடிதம்) - 27.10.1906, ப. 132 - (பா.த)*
- *சோம்பேரி (சோம்பேறி) - 07.07.1906, ப. 160 - (பா.த)*
- *ஜமீந்தார் (ஜமீன்தார்) - 30.07.1906, ப. 157 - (பா.த)*

*5. கலைச் சொல்லாளுமை*

*கலைச் சொல்லாக்கம் குறித்தப் பரலான புரிதலற்றக் காலத்தில் பாரதி கலைச் சொல்லாக்கம் குறித்தத் தெளிந்த வரையறையை முன்வைக்கும் திறன் பெற்றிருந்தார். பிற நாட்டுச் சாத்திரங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டும் எனும் பரவலானச் சிந்தனை கொண்ட பாரதி அயல்நாட்டு மற்றும் உள்நாட்டுத் தகவல்களை தமிழில் உடனுக்குடன் வழங்கிடும் ஆர்வம் கொண்டிருந்தார். பிற மொழிகளிலிருந்து குறிப்பாக, ஆங்கிலத்தில் இருந்து செய்திகளை மொழி பெயர்க்கும் போது அச்செய்திக்குரிய கலைச்சொல்லைப் பல்துறை அறிவுடன் சிந்தித்து மொழிபெயர்ப்பது தொழில்நுட்ப வசதிகளற்ற பாரதியின் காலத்தில் மிகச் சவாலாக இருந்தது. கலைச்சொற்கள் குறித்தக் களஞ்சியங்கள் பெரிதும் வளர்ச்சி பெறாத காலத்தில் தாமே முயன்று பல புதிய சொற்களைப் பாரதி தமிழ்கூறு நல்லுகத்துக்கு வழங்கினார். அங்ஙனம் உருவாக்கும் போது தமிழுக்கு முதலிடத்தையும் வடமொழிக்கு இரண்டாமிடத்தையும் பாரதி வழங்கினார். ஆங்கிலத்தை பெயர்ச்சொற்களைக் கையாளும்போது தவிர பிற இடங்களில் பயன்படுத்துவதை இயன்றவரை தவிர்த்து வந்தார். இதனை, "தமிழ்ச் சொற்கள் அகப்படாவிட்டால் சமஸ்கிருதப் பதங்களை வழங்கலாம். பதார்த்தங்களுக்கு மட்டுமேயன்றி கிரியைகளுக்கும் அவஸ்தைகளுக்கும் (நிலைமைகளுக்கும்) தமிழ் சமஸ்கிருத மொழிகளையே வழங்குதல் பொருந்தும். இந்த இரண்டு பாஷைகளிலும் பெயர்கள் அகப்படாத இடத்தில் இங்கிலிஷ் பதங்களையே உபயோகப்படுத்தலாம். ஆனால், குணங்கள், செயல்கள், நிலைமைகள் இவற்றிற்கு இங்கிலிஷ் பதங்களை ஒதுபோதும் வழங்கக்கூடாது."[2]*

*சான்று*

- *நடுத்தரர் கட்சி (Moderates), 06.10.1906, ப. 10 - (பா.த)*
- *சித்திர கலாசாலை (Arts College), 07.07.1906, ப. 70 - (பா.த)*
- *கிரீடச் சூட்டு (Coronatioon),22.09.1906, ப. 176 - (பா.த)*
- *மதுரக்கலை (FineArts), 15.12.1906, ப. 198 - (பா.த)*
- *யாத்திரை (Tour), 06.10.1906, ப. 221 - (பா.த)*

*6. புதுச்சொல்லாளுமை*

*மகாகவி பாரதியார் மரபார்ந்த யாப்பு நெறிகளுக்கு உட்பட்ட சொல்லாளுமையின்று மாறுபட்டுப் பாரதி நடை என்னும் புதிய நடைக்கு தடம் இட்டவர். பாரதி காலத்து அரசியல், பொருளாதாரம், சமுதாயம் மற்றும் மக்களின் கல்வி நிலையைக் கருத்திற்கொண்டு எளிய மக்களுக்கும் புரியும்வகையில் பழைய சொற்களுக்குப் புதிய பொருள் கொடுத்தும் புதிய சொற்களை சமகாலத் தேவைக்கேற்ப உருவாக்கியும் தனது சொல்லாட்சித் திறனை நிறுவியவர் பாரதி. குறிப்பாகப், புரட்சி எனும் சொல்லைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர் பாரதி ஆவார். "புரட்சி என்ற சொல் இல்லாமல் இன்று அரசியல், பொருளாதார சமயக் கருத்துகளை வெளியிட முடியுமா? என்பதை நினைத்துப் பார்த்தால் வியப்பாக இருக்கும் எனப் பாரதி பித்தன் குறிப்பிடுவது நோக்கத்தக்கது"[3]*

*மேலும், இடிப் பள்ளிக்கூடம், பொதுவுடைமை, தாழ்ச்சி, தொண்டச்சி, வினைச்சி, வீரை, நதிச்சடைமுடியன், அக்னிக்குஞ்சு, சேர்வைகள், நடுமை, செவ்விதழ்ச்சி, மன்மதக்கலை, ஊனர் போன்ற புதிய சொல்லாட்சிகளை பாரதி படைத்துள்ளார். "பொதுவுடைமை, மனித ஜாதி, பின்காப்பாளர், தோல் பொம்மைகள், வாக்குச் சீட்டு, புருஷ விதவை, படிப்பாளி, பொருளாளி, கிறிஸ்து சித்தர் ஆகியவை பாரதியார் கையாண்டுள்ள புதிய சொல்லாட்சிகள்"[4] எனும் இரா.மோகன் அவர்களது கருத்து குறிப்பிடத்தக்கது.*

*இந்தியா இதழிலும் இத்தகு சொல்லாளுமையைக் காணமுடிகின்றது. "சுவை புதிது, நயம் புதிது, வளம் புதிது, சொற்புதிது, ஜோதி கொண்ட நவகவிதை என்னாளும் அழியாத மகாகவிதை எனும் பாரதியின் சொல்புதிது குறித்த சுய மதிப்பீடு இந்தியா இதழில் வெளிப்படுகின்றது."[5]*

*சான்றுகள்*

- *புரட்சி (Revolution), 30.06.1906, ப. 300 - (பா.த)*
- *புண்ணிய சமாஜம் (புனிதமான கட்சி), 07.07.1906, ப. 5 - (பா.த)*
- *கோழை இராஜ தந்திரக் கட்சி (பிற்போக்குக் கட்சி), 17.11.1906, ப. 14 - (பா.த)*

- ❖ *வெள்ளை பத்திரிகை (ஆங்கிலேயர்கள் நடத்தும் இதழ்கள்), 11.08.1906, ப. 94 - (பா.த)*
- ❖ *தேசத்திருநாள் (Nation day), 27.10.1906, ப. 131 - (பா.த)*

*முடிவுரை*

*மகாகவி பாரதியாரின் இதழியல் பணிகளுள் இந்தியா பத்திரிகை தனிச்சிறப்பு மிக்கது. பாரதியின் எழுச்சிமிகு சிந்தனைகளின் வடிகாலாக இந்தியா இதழ் திகழ்ந்து வந்தது. எதிர்ப்பையும் எழுச்சியையும் எதிர்கொண்ட இந்தியா இதழில் பாரதியின் சொல்லாளுமை விரவிக் காணப்படுகின்றது. அவற்றை ஆங்கிலச் சொல்லாளுமை, வடமொழிச் சொல்லாளுமை, பிறமொழிச் சொல்லாளுமை, வழக்குச் சொல்லாளுமை, கலைச் சொல்லாளுமை, புதுச்சொல்லாளுமை எனும் ஆறு உட்பகுப்புகளின் அடிப்படையில் இக்கட்டுரை ஆய்ந்தளிக்கின்றது. பாரதியின் சொல்லாளுமை பழையனவற்றின் மீட்சியாகவும் புதியன படைப்பவருக்கு நீட்சியாகவும் அமைகின்றது. இந்தியா இதழில் வெளிப்படும் பாரதியின் புலப்பாட்டு நெறி பாரதியின் இதழியல் நடைக்குத் தனித்த அடையாளமாக ஒளிர்கின்றது. பாரதியின் சொல்லாளுமை எனும் புலப்பாட்டு நெறி இந்தியா இதழில் விரவிக் காணப்படுகின்றது எனும் இவ்வாய்வுக் கருதுகோளானது மெய்ப்பிக்கப்படுகிறது.*

மேற்கோள்


1. *இளசை மணியன், பாரதி தரிசனம் தொ.1, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1986, ப. 2*
2. *சுப்ரமணிய பாரதியார் சி, பாரதியார் கட்டுரைகள், பாரதி புத்தக நிலையம், மதுரை. 1964. ப. 324*
3. *பாரதி பித்தன், பாரதியின் சொல்லாட்சி, நியுசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1982, ப. 14.*
4. *இரா. மோகன், பாரதி இயல், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1982, ப.140*
5. *சுப்பிரமணி பாரதியார் சி, பாரதியார் பாடல்கள், பூம்புகார் பதிப்பகம், சென்னை, 1977. ப. 517.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********